திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (23-06-2026) மாலை, ஆழ்வார்பேட்டையில் உள்ள அவரது இல்லத்தில், SRMU பொதுச் செயலாளரும் – அகில இந்திய ரயில்வே சம்மேளனத்தின் தலைவருமான கண்ணையா அவர்கள் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் தலைமையில் மாணவரணி பகுதி துணை அமைப்பாளர் பா.சக்திதாசன் ஏற்பாட்டில் 1003 பேருக்கு நலத்திட்ட உதவிகளை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் வழங்கினார். இதில் தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அணிச் செயலாளர் டாக்டர் சுபேர்கான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஐ.ரீம் மூர்த்தி, இளைய அருணா, மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் பி.எம். யாழினி, மாவட்ட மகளிர் அணி தலைவர் வேளாங்கன்னி உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

முதல்வர் விஜய், உங்க குடும்பம் எங்கே சார்?

அவர்களை ஏன் இப்படி நடுத்தெருவில் கைவிட்டீர்கள்?

அசிங்கமான பின்னணியை வைத்துக் கொண்டு எந்த முகத்தோடு சட்டமன்றத்தில் நின்று - அடுத்தவர்கள் குடும்பத்தைப் பற்றி குட்டிக் கதை சொல்கிறீர்கள்?

முதல்வர் விஜய்க்கு – தி.மு.க. ஐ.டி. விங் வலைதளப் பதிவில் கேள்வி!

சென்னை, ஜூன் 25 -

சட்டமன்றம் என்பது மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளைப் விவாதிக்கும் மாண்புமிகுந்த இடம். அங்கே மிக மலிவாக, சட்டமன்றத்தின் கண்ணியத்தையே குழி தோண்டிப் புதைத்திருக்கிறார் இந்த 'இன்ஸ்டா அரசன்'!

எதிர்க்கட்சிகளை நக்கல் செய்கிறேன் பேர் வழி என அடுத்தவர் அப்பாவைத் தேடும் C.M சார், நாங்க நேரடியாகவே உங்களுக்கும் உங்க Virtual Abusersக்கும் புரியும் மொழியிலேயே கேட்கிறோம்.

உங்க குடும்பம் எங்கே சார்?

அவர்களை ஏன் இப்படி நடுத்தெருவில் கைவிட்டீர்கள்?

உங்கள் சொந்தப் பிள்ளைகளின் நண்பர்கள் இன்று, "உங்க அப்பா எங்கடா?" என்று கேட்டால், அந்தப் பிள்ளைகள் என்ன பதில் சொல்வார்கள் என உங்களுக்கு என்றாவது உறைத்திருக்கிறதா?

உங்களது சொந்த மனைவியே, "என் கணவன் இன்னொரு நடிகையோடு தொடர்பில் இருக்கிறார்" என்று கூறி நீதி மன்றத்தில் விவாகரத்து கேட்கும் அளவுக்குக் கேவலமான நிலையில் உங்க எது தனிமனித வாழ்க்கை இருக்கிறதே, இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

DMK IT WING

இப்படிப்பட்ட அசிங்கமான பின்னணியை வைத்துக் கொண்டு, எந்த முகத்தோடு சட்டமன்றத்தில் நின்று அடுத்தவர்கள் குடும்பத்தைப் பற்றிக் குட்டிக்கதை சொல்கிறீர்கள்?

மேடைக்கு மேடை 'தனிமனித ஒழுக்கம்' என்று ஊருக்கு உபதேசம் செய்யும் 'சோஃபா மாடல்' முதலமைச்சரே, முதலில் உங்களது சொந்தக் குடும்பத்தின் வண்டவாளங்களைச் சரிசெய்துவிட்டு, அப்புறம் சட்டமன்றத்தில் வந்து வாய் கிழியப் பேசுங்கள்!

திருவாரூர் வருகைதரும்

கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் - இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலினுக்கு மாவட்டக் கழகம் சார்பில் பிரமாண்ட வரவேற்பு!

திருவாரூர், ஜூன் 25 -

கழகத் தலைவரும், திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்க ளும், தமிழ் நாட்டு இளைஞர்களின் நம்பிக்கை, கழக இளைஞர் அணிச் செயலாளர், சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், கழகக் கோட்டையாம் திருவாரூருக்கு வருகை தருவதையொட்டி மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அவர்களின் தலைமையில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட வுள்ளது.

திருவாரூர் மாவட்டத் தின் அடையளங்களில் ஒன்றாக திகழும் கலைஞர் கோட்டத்தில் இன்று (25.06.2026 - வியாழன்) நடைபெற இருக்கும், கழக விவசாய தொழிலாளர் அணியின் மாநில தலைவ ரும் , முன்னாள் அமைச்ச ருமான உ.மதிவாணன் அவர்களின் இல்லத்திரு மண நிகழ்விற்கு தலைமை யேற்றும், மணமக்கள் மதி. கதிரவன் - த.மௌனிகா ஆகியோரின் திருமணத்தை நடத்திவைக்கவும் வருகை தரும் கழக தலைவரும், திராவிட மாடல் ஆட்சி யின் பிதாமகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ் நாட்டு இளைஞர்களின் நம்பிக்கை, கழக இளைஞர் அணி செயலாளர், சட்ட மன்ற எதிர்க்கட்சி தலை வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், திருவாரூ ரில் மாவட்டக்கழக செய லாளரும், சட்டமன்ற உறுப் பினருமான பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ., அவர்களின் தலைமையில், கழக தோழர்கள், நிர்வாகி கள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் திரண்டு உற்சாக வரவேற் பளிக்க இருக்கின்றனர்.

நாடாளுமன்ற, சட்ட மன்ற, முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர் பெருமக்கள், மாவட்டச் செயலாளர் கள், ஒன்றிய, நகர, பேரூர், கழகங்களின் செயலாளர் கள், சார்பு அணிகளின் மாநில, மாவட்ட, நிர்வாகி கள், தலைமைச் செயற் குழு, பொதுக்குழு உறுப்பி னர்கள், கழகத் தோழர்கள் என பெருந்திரளானோர் பங்கேற்று கழக தலைவ ரும், திராவிட மாடல் ஆட் சியின் பிதாமகருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாட்டு இளைஞர்க ளின் நம்பிக்கை, கழக இளைஞர் அணிச்செயலா ளர், சட்டமன்ற எதிர்க்கட் சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் வரவேற்பளிப்பதுடன், இந்த திருமண விழாவில் பங்கேற்றும் சிறப்பிக்கின்ற னர்.

த.வெ.க.வினரின் உருட்டல் மிரட்டல்களுக்கு எல்லாம் பயப்பட மாட்டோம்!

நெருக்கடி காலத்திற்கே அஞ்சாத இயக்கம் தி.மு.க.!

முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, ஜூன் 25– 'தி.மு.க. நெருக்கடி காலத்திற்கே அஞ்சாத இயக்கம். எங்கள் மடியில் கனமில்லை. வழியிலே பயமில்லை. ஆளும் த.வெ.க. அரசின் உருட்டல் மிரட்டல்களுக்கெல்லாம் பயப்பட மாட்டோம்' என ஊட்டியில் 'கோவில் மல்டி லெவல் கார் பார்க்கிங்' பற்றிய செய்தியாளர்களின் கேள்விக்கு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவரது பேட்டி வருமாறு:-

ஊட்டியில் அமைந்திருக்கின்ற 52 திருக்கோயில்களுக்கும் நான் ஐந்து நாட்கள் முழுமையாக ஆய்வினை மேற்கொண்டேன். அந்த இடம், பத்தாயிரம் சதுரடி பரப்பளவு கொண்ட, அந்த விநாயகர் கோயிலுக்குச் சொந்தமான இடம். அந்த இடத்தில் ஏற்கனவே நகராட்சியும் 'மல்டி லெவல் கார் பார்க்கிங்' கட்டுவதற்குத் தேவை இருக்கிறது என்று கூறியிருந்தது.

இந்த வகையில் நாம் அந்த இடத்தை ஆய்வு செய்து, அன்றைய சட்டப் பேரவை உறுப்பினராகவும் அந்த மாவட்டத்தினுடைய அமைச்சராகவும் இருந்த அருமை அண்ணன் ராமச் சந்திரன் அவர்கள் கோரிக்கை வைத்ததற்கிணங்க, இதைப் பரிசீலித்து, இக்கோயிலுக்குத் தேவைப்படுகின்ற நிதியை மருதமலை திருக்கோயிலிலிருந்து கடனாகப் பெறுவதற்கு, அவர்களுக்கு இந்தத் திருக்கோயிலுடைய செயற்பொறியாளர் ஒரு தாக்கீது அனுப்பி, அதன் அடிப்படையில் அந்தத் திருக்கோயிலில் இருக்கின்ற துணை ஆணையர் அவர்கள் பரிந்துரைத்து, அது இணை ஆணையர் வாயிலாக ஆணையருக்குச் சென்று, அன்றைக்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

அந்தத் திருக்கோயிலுடைய நிதியைப் பயன்படுத்துவதற்கு, அந்த மருதமலைத் திருக்கோயில் அறங்காவலர்கள் அன்றைக்குச் சம்மதம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றார்கள். இதில் எங்கு, என்ன தவறு நடந்தது என்று அவர் நேற்றுச் சொன்னார் என்றே தெரியவில்லை.

நிச்சயமாகச் சொல்கிறேன்... வணிகரீதியானது என்பது அந்தத் திருக்கோயிலுக்குத் தேவையான வருமானங்களை ஈட்டுகின்ற ஒரு முயற்சியாகும். குன்னூர் என்பது சுற்றுலாப் பகுதி; தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்ற பகுதி. அந்தப் பகுதியிலே வாகனங்கள் நிற்பதற்குக்கூட இடங்கள் இல்லாத ஒரு சூழல்; பெரிய கடையின் முன்புகூட ஒரு இருசக்கர வாகனத்தைக் கூட நிறுத்த அனுமதிக்க முடியாத ஒரு சூழல். திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்கள் பயன்பாட்டிற்கு மாத்திரமல்லாமல், அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுடைய பயன்பாட்டிற்கும் அந்த 'மல்டி லெவல் கார் பார்க்கிங்' கட்டிக் கொடுக்கப்பட்டால், அதில் நிர்ணயிக்கப்படுகின்ற அந்தக் கட்டணத்தை வைத்து, ஊட்டியில் நலிவடைந்த நிலையில் உள்ள 52 திருக்கோயில்களின் அடிப்படைத் தேவைகளுக்கு, அதில் வருகின்ற வருவாயை முழுமையாகப் பயன்படுத்த முடியும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் கடந்த திராவிட மாடல் ஆட்சியில் தொடங்கப்பட்டது.

அதை முழுமையாக உணராமல், புரியாமல் ஒரு அமைச்சர் அவசர கதியில் பேசுகிறார். எனவே, இந்தப் பேட்டியைப் பார்த்த பிறகாவது, அந்தத் திட்டம் ஏன் கொண்டு வரப்பட்டது, அந்தத் திட்டம் ஏன் செயல்படுத்துவதற்கு முயற்சிக்கப்பட்டது என்ற உண்மை நிலையை அவர் உணர வேண்டும். இதுவரையில் அந்தத் திட்டத்திற்கு உண்டான அனுமதி ரத்து செய்யப்படவில்லை என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

'மல்டிலெவல் கார் பார்க்கிங்'

பத்திரிகையாளர்: அமைச்சர் குறிப்பாகச் சொல்லும்போது, 500 பேர் கூட வராத ஒரு இடத்திற்கு எதற்கு 'மல்டி லெவல் கார் பார்க்கிங்' என்று கேட்கிறார்?

500 பேர் கோயிலுக்கு வருவதற்காக மட்டுமல்ல; ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள், ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள், லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் விடுமுறைக் காலங்களிலும், கோடைக் காலங்களிலும் சுற்றுலாப் பயணிகளாக வருபவர்களுக்காகத் தான் அந்த கார் பார்க்கிங் ஏற்படுத்தப்பட்டதே தவிர, வெறும் திருக்கோயிலுக்கு வருபவர்களின் பயன்பாட்டிற்கு மாத்திரம் ஏற்படுத்தப்படவில்லை.

அதோடு, நலிவடைந்த திருக்கோயில்களுடைய நிலையை மேம்படுத்துவதற்காகவும், வருகின்ற பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு உண்டான வருவாயை உயர்த்துவதற்காகவும் தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அறிவு சார்ந்த அனைவரும் இதை வரவேற்பார்கள்.

பத்திரிகையாளர்: சட்ட சபையில் விளக்கம் கொடுப்பதற்கே இடமளிக்காதது குறித்து?

நிச்சயமாக... சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், நீங்கள் அறியாதது ஒன்றுமில்லை; தெரியாதது ஒன்றுமில்லை. முழு விளக்கம் கிடைக்கும் அல்லது அமைச்சர்கள் கூறிய கருத்திற்கு எதிர்கருத்து வாதம் சரியாக இருக்கும் என்றால், எப்போதுமே அனுமதி தர மாட்டார்கள், அனுமதி மறுப்பார்கள். அதுதான் நேற்றைக்கு முழுமையாக அனுமதி மறுக்கப்பட்டது.

நாங்கள் அடிக்க அடிக்க உயர்கிற பந்து

பத்திரிகையாளர்: மக்கள் பணத்தை ஒரு பைசா கூட தொட மாட்டோம்; தொட்டவர்களையும் சும்மா விட மாட்டோம்... ஊழலை வெளிப்படுத்தப் போகிறோம். குறித்து?

கொஞ்சம் நாள் பொறுத்த பிறகு இதையெல்லாம் சந்திக்கலாம் என்று இருந்தோம். இது நெருக்கடி காலத்திற்கே அஞ்சாத இயக்கம்; இது போன்ற உருட்டல், மிரட்டல்களுக்கெல்லாம் பயப்படுவோமா! மடியிலே கனமில்லை, வழியிலே பயமில்லை. ஏதாவது அவர்களிடம் குற்றங்கள் ஆதாரபூர்வமாக இருந்தால், நிச்சயமாக அதன் மீது அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தாலும் சட்டப்படி சந்திக்கத் தயாராக இருக்கின்றோம். இன்னும் அடிக்க அடிக்க உயர்கின்ற பந்தாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் மேலும் மேலும் எழுந்து, நிமிர்ந்து, திமிறி நிற்கும். இது போன்ற உருட்டல், மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சுகின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல.

பதிலடி

பத்திரிகையாளர்: சட்ட சபையில் முதலமைச்சர் பேசும்போது, ஒரு 'சைகை' ஒன்று காண்பித்தார். 'அப்பாவைக் காணோம்' என்று ஒரு குட்டிக் கதை சொன்னார். குறித்து?

அதற்குத் தகுந்த பதிலடியை, எங்களுடைய முன்னாள் துணை முதல்வர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவரும் ஆளுமையோடு அனைத்தையும் பதிவு செய்திருக்கின்றார். அவர் பேசுவதற்கு உண்டான வாய்ப்பை முழுமையாக நல்கியிருந்தால், நிச்சயமாக அங்கேயே பேசியிருப்பார்; அங்கேயே அதற்குத் தகுந்த பதிலடி தந்திருப்பார். எனவே, நானும் ஐந்தாவது முறையாகச் சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றேன். சட்டமன்றத்தில் ஜனநாயக முறைப்படி கடந்த காலங்களில் பல்வேறு முதலமைச்சர்கள் பேசுகின்ற பொழுது, எதிர்க் கட்சித் தலைவரின் குறுக்கீட்டை எல்லாச் சபாநாயகர்களும் அனுமதிப்பார்கள். அதேபோல் எதிர்க்கட்சியினரின் குறுக்கீடுகளை முதலமைச்சர்களும் ஏற்றுக் கொண்டு, அவருடைய குறுக்கீடுகளைக் கேட்டு அதற்கு விளக்கம் அளிப்பார்கள்.

ஏன், கடந்த காலங்களில் ஜனநாயகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்த எங்கள் திராவிட மாடல் ஆட்சியின் தலைவர், எதிர்க்கட்சியினுடைய துணைத்தலைவர், கொறடா போன்றவர்கள் கூட முதலமைச்சர்கள் பேசுகின்ற பொழுது எழுந்து குறுக்கீடு செய்தால், அனுமதித்து அதற்குப் பதிலளிப்பார். ஆனால், இவர் தயாரித்து வந்ததைத் தவிர வேறு எதையும் பேசுகிற நிலை இல்லாததால், சபாநாயகர் அதற்கு அனுமதி அளிக்கவில்லை; அனுமதி மறுத்தார்.

இவ்வாறு பி.கே.சேகர் பாபு தெரிவித்தார்.

நெல்லை எம்.எம்.சாமி தலைமை! இரா.பொன்ராம் – ஜெ.விஜயகுமார் பங்கேற்பு!

கலவை தொ.மு.ச.சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள்! நலஉதவிகள்!

கி.நடராசன் – கோ.சி.வள்ளுவன் வழங்கினர்!

சென்னை, ஜூன் 25 -

அகில இந்திய தொ.மு.ச. பொது செயலாளர் மு.சண்முகம் அவர்களின் அறிவுறுத்தலின்படி தமிழ்நாடு கலவைத் தொ.மு.ச. சார்பில் சென்னை தொ.மு.ச பேரவை கலைஞர் அரங்கத்தில் முத்தமிழர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கலவைத் தொ.மு.ச.மாநில தலைவர் நெல்லை எம்.எம்.சாமி தலைமையில் கட்பீஸ் ப. சோமசுந்தரமூர்த்தி, வெ.சு.சத்தியநாராயணன், எஸ்.பி.எஸ்.புத்தன், ஜெ.சுரேஷ்பாபு ஆகியோர் முன்னிலையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பேரவை தலைவர் கி.நடராசன், மற்றும் பேரவை பொருளாளர் கோ.சி.வள்ளுவன் ஆகியோர் சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் பேரவை நிர்வாகிகள் இரா.பொன்ராம், ஜெ.விஜயகுமார், பன்னீர்செல்வம், SCTC அலுவலக செயலாளர்கள் பன்னீர்செல்வம், சண்முகசுந்தரம், பத்மநாபன், அருண கிரி நாதன், சென்னை மாவட்ட கவுன்சில் நிர்வாகிகள் எஸ்.சுந்தரமூர்த்தி, கே. இளங்கோவன், கி. கண்ணன், கே.தங்கராஜ், வி.யூ.கார்த்திகேயன், மோ.செந்தில்குமார், எஸ். யுவராஜ், சி.செந்தாமரை, பேரவை அமுல்ராஜ், அசோகன், விஜயகுமார், முருகன், கார்த்தி, சைதை ஜெயபால், கா:ரீதர், கிருஷ்ணா கிரி வெங்கடேசன், சிவக்குமார், ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நெல்லை எம்.எம்.சாமி நிகழ்ச்சிகான ஏற்பாட்டினை செய்திருந்தார்.

தாம்பரம் மாநகரம் பம்மல் வடக்குப் பகுதி 3வது வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் வட்டச் செயலாளர் க.மோகன் தலைமையில் மூத்த முன்னோடி சிவசங்கரய்யா முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் வரவேற்றார். காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.